**அம்பகமுவ பிரதேச சபை -2021**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

அம்பகமுவ பிரதேச சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமான மற்றும் செலவினக் கணக்கு, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172 (I) உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்களிலிருந்து 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அம்பகமுவ பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகைத் தரப்பினரின் பொறுப்புக்கள்

இந் நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாக தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வு அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தமானதன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்களுக்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்
- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

**1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6 (I) (ஈ) (iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6 (I) (ஈ) (iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்**

**1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டிற்குரிய ரூபா 35,090 ஆன சம்பள செலவினம் ஆண்டின் செலவினமொன்றாக காண்பிக்காமல் திரண்ட நிதியத்திற்கு சீராக்கப்பட்டிருந்தது. | சீராக்கம் செய்வதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | கொடுக்கல் வாங்கல்கள் சரியாக வருடாந்த நிதிக்கூற்றுக்களில் இனங்காணப்பட வேண்டும். |
| (ஆ) சபை நடாத்திச் செல்லப்பட்டிருந்த காணி மற்றும் கட்டிடங்கள் பதிவேட்டில் உள்ளடக்கப் பட்டு சபையால் உடமை கொண்டுள்ள, பயன்படுத்தப்படுகின்ற 42 காணித் துண்டுகளின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | குறித்த காணி தொடர்பாக தற்காலிக மதிப்பீடொன்றை தொழில்நுட்ப உத்தியோகத்தர் மற்றும் வருமான பரிசோதகர் ஊடாக பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | அனைத்த சொத்துக்களும் கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |
| (இ) நிதிக் கூற்றுக்களில் 03 சந்தர்ப்பங்களின் போது ரூபா 1,362,800 ஆன சொத்துக்கள் கூடுதலாகவும் ஒரு சந்தர்ப்பத்தின் போது மொத்தம் ரூபா 129,250 ஆன சொத்துக்கள் குறைத்தும் காணப்பட்டன | 2022 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் சீராக்கம் செய்வதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | நிதிக் கூற்றுக்கள் சரியாக தயாரிக்கப்பட வேண்டும். |

### 1.6.2. இனங்காத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட 03 கணக்கு மீதிகளுக்குரிய அட்டவணைகளுடன் பரீட்சிக்கும் போது ரூபா 419,221 ஆன வேறுபாடுகள் காணப்பட்டன. | பரீட்சிக்கப்பட்டு ஆவணங்களில் உட்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | கணக்கு மீதிகளில் வித்தியாசம் தொடர்பாக ஆராய்ந்து உரிய அட்டவணைகள் அல்லது நிதிக் கூற்றுக்கள் சீராக்கம் செய்யப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 29,540,126 ஆக இருந்ததுடன், அதற்கு அதனோடொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 31,943,635 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 வருமானம் சேகரிப்பின் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **வாடகை** | | |
| கேள்வி நடைமுறைகள் பின்பற்றப்பட்டு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்த 06 ஆதனங்களிலிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 888,354 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | ரூபா 598,660 ஆன நிலுவை தொகையை அறவிடுவதற்கு வழக்கு தொடரப்பட்டுள்ள தாகவும் ரூபா 180,815 ஆன நிலுவை காணப்படும் இரண்டு குத்தகை உடமையாளர்கள் இணக்க சபைக்கு தொடர்புபடுத்தப் பட்டு மாதாந்தம் ரூபா 10,000 கொடுப்பனவு செய்து வருவதாகவும் ரூபா 71,829 நிலுவை காணப்படும் மூன்று குத்தகை உடமையாளர்களின் நிலுவை 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக இருப்பதால் வழக்கு தொடர முடியாமல் காணப்படுவதாகவும் அறிவிக்கப்பட்டிருந்தது. | தாமதமின்றி நிலுவை வருமானங்களை சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

பிரதேச சபைகள் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

### 3.1 ஒப்பந்த நிர்வாகத்திலான குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) சபை நிதியத்திலிருந்து ரூபா 24 மில்லியன் செலவு செய்து நிர்மாணிக்கப்பட்ட உத்தேச சுடலைச்சாலையின் நிர்மாண வேலைகள் 2022 ஏப்ரல் 04 ஆந் திகதி அளவில் பூர்த்தி செய்ய வேண்டியிருந்தது. எனினும் 2022 பெப்ரவரி 22 ஆந் திகதிய பௌதீக பரிசோதனையின் போது அதற்கு அத்திவாரம் இட்டு சில அடிகளுக்கு சுவர்கள் மாத்திரம் கட்டபப்பட்டிருந்ததுடன் சுடலை சாலையை நிர்மாணிப்பதற்கு முன்னர் நிலத்தின் உரித்தை சபைக்கு கையேற்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2022 ஆகஸ்ட் 10 ஆந் திகதி வரை கூரை மட்டம் வரை சுவர்கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாகவும் ரூபா 7,007,415 ஆன வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாகவும் நாட்டில் காணப்பட்ட சீரற்ற நிலைமையால் செயற் திட்டத்தை பூர்த்தி செய்வதற்கு 2023 சனவரி 08 ஆந் திகதி வரையான கால நீடிப்பு வழங்கப்பட்டுள்ள தாகவும் தற்போது காணியை கையேற்பதற்காக கௌரவ காணி அமைச்சரின் அங்கீகாரம் கிடைத்துள்ளதா கவும் அறிவிக்கப்பட்டிருந்தது. | விரைவில் நிர்மாணங்கள் பூர்த்தி செய்ய்பபட வேண்டியதுடன் காணியின் உரித்தையும் கையேற்க வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 சுற்றாடல் சிக்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2020 சனவரி முதல் திசெம்பர் வரையான காலப்பகுதியில் அம்பகமுவ பிரதேச சபையின் அதிகாரப் பிரதேசத்தில் 502 தொன் உக்கும் கழிவுகளும், 151 உக்காத தொன் கழிவுகளுமாக 653 தொன் கழிவுகள் உருவாக்கப்பட்டிருந்ததுடன் சபைக்குச் சொந்தமான கழிவுப்பொருள் முகாமைத்துவ நிலையமொன்று இனங் காணப்படாதிருந்த காரணத்தினால் அக்கழிவுப்பொருட்களை மஸ்கெலியா பிரதேச சபையின் ரிகாடன் கழிவு தொகுதிக்கு நாளாந்தம் 90 கிலோமீற்றர் அளவில் எடுத்துச் செல்லப்பட்டிருந்தது. அதற்காக டிபர் வண்டியொன்று, களி பௌசரொன்று மற்றும் டிராக்டரொன்று என்பவற்றிற்காக எரிபொருள் மற்றும் திருத்தச் செலவினங்களுக்காக ரூபா 1,583,875 தொகையும் கழிவுப்பொருள் போக்குவரத்திற்காகவும் 13 சுகாதார தொழிலவாளர்களுக்கு சம்பளமாக ரூபா 16,320,850 தொகையுமாக ரூபா ரூபா 17,904,730 ஆன செலவினமொன்று 2021 சனவரி முதல் திசெம்பர் வரை செலவிடப்பட்டிருந்தது. இக்கழிவுப்பொருட்களை சபை அதிகாரப் பிரதேசத்தில் முகாமைத்துவம் செய்தால் இந்த எரிபொருள் செலவினம், மேலதிக நேர வேலை செலவினம் மற்றும் இணைந்த படிகள் போன்ற செலவினங்களை குறைத்துக் கொள்ள முடியுமாக இருக்கும். | சபைக்குச் சொந்தமாக கழிவுப்பொருள் நிலையமொன்று இல்லாமையால் அதற்காக பொருத்தமான இடமொன்றை இனங்காண்பதற்கு நடவவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. அதுவரை இச்செலவினத்தை மேற்கொள்ள நேர்வதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | செலவினங்களை குறைக்கும் வகையில் கழிவுப்பொருட்கள் முகாமைத்துவம் செய்யப்படல் வேண்டும். |